# 21

## சபை:

# இதன் நிதிகள்

## *நாம் ஏன் கொடுக்க வேண்டும்?*

1. ***எல்லா ஆசீர்வாதங்களும் யாரிடத்திலிருந்து வருகின்றன (யாக். 1:17)?***
2. ***எல்லாவற்றையும் உடையவராய் இருக்கிறவர் யார் (1 நாளா. 29:11, 12)?***
3. ***ஒவ்வொரு கிறிஸ்தவரும் என்னவாக உள்ளார்? அவரிடத்தில் கேட்டுக் கொள்ளப்படுவது என்ன (1 கொரி. 4:1, 2; 1 பேது. 4:10)?***
4. ***எல்லாருக்குமான கட்டளை என்ன (மத். 5:42; லூக். 6:30)? ஒவ்வொருவரும் ஏன் வேலை செய்ய வேண்டும் (எபே. 4:28)?***

## *கொடுக்க வேண்டியவர்கள் யார்?*

1. ***கொடுக்கும்படி பவுல் யாருக்குக் கட்டளையிட்டார் (1 கொரி. 16:2)?***
   - *அ. "உங்களில் அவனவன்" என்பதன் வலிவு என்ன? ஒவ்வொரு கிறிஸ்தவரும் - ஆண், பெண், சிறுவன், சிறுமி ஆகிய ஒவ்வொருவரும் - கொடுக்க வேண்டுமா?*
   - *ஆ. பிள்ளைகளுக்காகப் பெற்றோர் கொடுக்க வேண்டுமா? பிள்ளைகளுக்காகப் பெற்றோர் கொடுத்தால், பிள்ளைகளுக்காக அவர்களே ஞானஸ்நானமும் பெற முடியாதா? பிள்ளைகளுக்காக அவர்களே கர்த்தருடைய பந்தியிலும் பங்கேற்கக் கூடாதா? அவர்களுக்காக இவர்களே ஜெபிக்கவும் பாடவும் கூடாதா?*

## *எல்லாரும் எவ்விதம் கொடுக்க வேண்டும்?*

1. ***ஒருவருடைய கொடுத்தலை வரையறுக்கும் அடையாளம் என்ன (1 கொரி. 16:2)?***
2. ***யூதேயாவில் இருந்த பரிசுத்தவான்களின் நிவாரணத்திற்கென்று அந்தியோகியாவில் இருந்த சபையார் எவ்விதம் கொடுத்தனர் (அப். 11:29)?***
3. ***தமக்குச் சொந்தமானவர்களுடைய ஈவுகளைத் தேவன் எவ்வாறு ஏற்றுக்கொள்ளுகின்றார் (2 கொரி. 8:12)?***
4. ***கொடுத்தல் என்பது எவ்விதத்தில் செய்யப்படக் கூடாது? அது எவ்விதத்தில் செய்யப்பட வேண்டும் (2 கொரி. 9:7)?***

*அ. கொடுத்தலில், காணிக்கைகளை ஏற்படுத்தியது யார் (மாற். 12:41ஆ, 44அ)?*

*ஆ. பதிலுக்கு தியாக உணர்வுடன் கொடுத்தது யார்? ஏன் (மாற். 12:42-44ஆ)? கொடுத்தலில் "குறியை அடைதல் - அல்லது - தவறவிடுதல்" என்ற அமைப்பைப் பற்றிக் கலந்துரையாடவும்.*

## *எப்பொழுது கொடுக்க வேண்டும்? - இதன் ஒழுங்கு முறை*

1. ***ஒவ்வொருவரும் எப்பொழுது கொடுக்க வேண்டும் என்று பவுல் கூறினார் (1 கொரி. 16:2)?***

   *அ. ஒவ்வொரு கிறிஸ்தவரும் முறைப்படி கொடுக்க வேண்டாமா? அது ஏன் ஒழுங்கு முறையாகக் கொடுக்கப்பட வேண்டும் (1 கொரி. 16:2)?*

   *ஆ. கொடுத்தல் யாவும் நியமித்தபடி, சிந்தனையுடன், வேண்டுமென்றே மற்றும் மதிநுட்பத்துடன் இருக்க வேண்டுமா?*

   *இ. முறைப்படியான கொடுத்தல் என்பது குறைபாடுகள் மற்றும் கவலைகள் எல்லாவற்றையும் எவ்வாறு நீக்கிப் போடும்?*

   *ஈ. "குறியை அடைதல் - அல்லது - தவற விடுதல்" என்ற முறையிலானகொடுத்தல் பாவம் நிறைந்ததாக இருப்பதில்லையா?*

## *கொடுத்தலின் வட்டம்*

1. ***ஏழைப் பரிசுத்தவான்கள் எவ்வாறு நினைவு கூரப்பட வேண்டும் (அப். 2:45; 4:34, 35)?***
2. ***பிலிப்பியில் இருந்த சபையார் யாருக்கு உதவி செய்தனர் (பிலி. 1:1; 4:14-16)?***
3. ***பிரசங்கியார்கள் உதவி பெறுவதில் எவ்வாறு வருகின்றனர் (1 கொரி. 9:14; 1 தீமோ. 5:18)?***
4. ***தேவையில் உள்ளவர்களுடன் சபையார் எவ்வாறு ஐக்கியம் கொள்ள வேண்டும் (ரோமர் 12:13)?***
5. ***மற்றவர்களுக்கு உதவும் வட்டத்தை இயேசு எவ்வாறு விரிவு படுத்தினார் (லூக். 6:30; கலா. 6:10)?***

## *தாராள குணத்தின் ஆசீர்வாதங்கள்*

1. ***லூக். 6:38ஐ மனப்பாடம் செய்யவும்.***
2. ***பரலோகத்தில் பொக்கிஷங்கள் எவ்வாறு சேர்த்து வைக்கப்படுகின்றன (மத். 6:20, 21; 1 தீமோ. 6:17-19)?***
3. ***தக்க வகையில் கொடுத்தல் என்பது இருதயத்தை எவ்விதத்தில் சுத்திகரிக்கும் (லூக். 11:41)?***

4. தாராளமாய்க் கொடுக்கின்றவர் எவ்வாறு ஆசீர்வதிக்கப்படுகின்றார் (2 கொரி. 9:6, 8, 9; கலா. 6:7, 8)?
5. தேவனுடைய மிக மேன்மையான ஈவு என்ன (2 கொரி. 8:9)?
6. கொடுக்கிறவர் மீது இயேசு கூறிய ஆசீர்வாதம் என்ன (அப். 20:35)?

## ஆழ்ந்த சிந்தனைக்குச் சில விஷயங்கள்

1. தகுதி பெற்ற எந்த ஒரு நிறுவனமும் பணம் இல்லாமல் வெற்றி பெற முடியுமா? எவ்வாறு என்று கூறுக.
2. ஒவ்வொரு கிறிஸ்தவரும் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று "நியமித்துக் கொள்ள" வேண்டுமா?
3. "வாக்குக் கொடுக்கும்/பிணையம் கொடுக்கும் முறைமையில்" உள்ள தவறு என்ன? அதைப் பற்றிக் கலந்துரையாடவும் (2 கொரி. 7:5).
4. "நிர்வாகச் செலவுகளை"க் கூட மிகவும் கஷ்டப்பட்டே கொடுக்கும் சபையானது தேவனைப் பிரியப்படுத்துமா?
5. ஒவ்வொரு உறுப்பினரும் எவ்வளவு கொடுக்கத் திட்டமிடுகிறார் என்பதை மூப்பர்களும் உதவிக்காரர்களும் அறிய வேண்டாமா? இது சபையின் ஊழியத்திற்கு எவ்வகையில் உதவும்?
6. கஞ்சத்தனமான, பொருளாசை கொண்ட கிறிஸ்தவருக்கு என்ன நேரிடும் (1 கொரி. 6:9, 10)?
7. தசம பாகம் கொடுத்தல் என்பது கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்துவதில்லை என்று நீங்கள் எப்படி அறிகின்றீர்கள் (எபி. 7:12)?
   - அ. கிறிஸ்தவக் கொடுத்தல் பற்றிக் கலந்துரையாடவும் (1 கொரி. 16:2).
   - ஆ. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தசம பாகத்திற்கும் மேலாகக் கொடுக்க வேண்டும் என்பது ஏன் (எபி. 7:11).